IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.327/2022**

**நாள்– 21.08.2023**

முப்புடாதி

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் படிக்கவில்லை. இந்த விபத்தில் நான் நேரில் பார்க்கவில்லை. இந்த விபத்தை நான் பார்க்காததால் யாருடைய கவனக்குறைவினால் இந்த விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. இந்த மனுவில் என்னுடைய கணவர் எந்த கடையில் புரோட்டா மாஸ்டராகவும் டீ மாஸ்டராகவும் இருந்தார் என்ற விவரத்தை கூறவில்லை. அந்த கடையின் பதிவுச் சான்றிதழ், வரி ரசீது, உரிமம் போன்றவற்றை தாக்கல் செய்யவில்லை. மாதம் ரூ.30,000/– வரை வருமானம் வந்தது என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மனுவில் என்னுடைய கணவரின் வயது 42 என்று கூறியிருக்கிறேன். ஆனால் என்னுடைய கணவரின் பிரேதப்பரிசோதனை அறிக்கையில் 44 வயது என்று குறிப்பிட்டுருக்கிறது என்றால் என்னுடைய தாயார் 42 என்று தான் கூறினார். என்னுடைய கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் உள்ளது. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியிருக்கும் இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் ஓட்டி சென்ற வாகனம் என்னுடைய கணவருடையது இல்லை என்பதாலும் என்னுடைய கணவரின் கவனக்குறைவினால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதாலும் இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வாகனம் என் கணவர் வேலை பார்த்த உரிமையாளரின் வாகனம் ஆகும்.

**மறுவிசாரணை இல்லை.**